ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக டெல்லியை நோக்கி

# 1 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்ற மாபெரும் பேரணி!

## போலீசாரின் கெடுபிடிகளையும் மீறி முழக்கம்!

புதுடெல்லி, பிப்.15 -

ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராக டெல்லியை நோக்கி ஒரு லட்சத்திற் கும் மேற்பட்ட விவசாயிகள் 2வது நாளாக நேற்று பேரணியாகச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டனர். விவசாயிகள் மீது காவல்துறையினர் பிளாஸ்டிக் குண்டுகள் மூலம் நடத்திய தாக்குதல் சம்பவத்தையும் மீறி விவசாயிகள் இப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



விளை பொருட்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி,

டெல்லியை முற்றுகையிடும் போராட்டத்தை விவசாயிகள் நேற்று முன்தினம் தொடங்கியுள்ளனர்.

இதற்காக, பஞ்சாப், அரியானா, உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் டெல்லிக்கு வாகனங்களில் பேரணியாக நேற்று புறப்பட்டனர். டெல்லி எல்லையில் ஷம்பு பகுதியில் போலீசாரின் தடுப்புகளை தகர்த்து நுழைய முயன்றவர்கள் மீது போலீசார் தண்ணீரை பீய்ச்சி அடித்தும், விவசாயத்திற்கு பயன்படுத்தும் ட்ரோன்கள் மூலம் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும் கலைக்க முயன்றனர்.

விவசாயிகள் பேரணியாக டெல்லி செல்வதை தடுக்க டெல்லி எல்லைப் பகுதிகளான சிங்கு, திக்ரி, காசிப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் 5 ஆயிரம் பாதுகாப்பு படையினர் மற்றும் துணை ராணுவத்தினர் என்று 5000க்கும் மேற்பட்டோர் குவிக்கப்பட்டுள்ளனர்.

போலீசாரின் அடாவடி அராஜகத்தையும் பொருட்படுத்தாமல் தடியடி, குண்டு வீச்சு, தண்ணீர் பீய்ச்சு அடித்தல், ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள தடுப்புகளையும் மீறி லட்சக்கணக்கான விவசாயிகள் டெல்லி நோக்கி பேரணியாகச் சென்றனர்.



தி.மு.க. தலைமை நிலையமான அண்ணா அறிவாலய துணை மேலாளர் ஜெயக்குமார் மறைவையொட்டி நேற்று முன்தினம் கழக பொருளாளர் டி.ஆர்.பாலு தலைமையில் நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் கழக துணை பொதுச் செயலாளர்கள் முனைவர் க.பொன்முடி, ஆ.ராசா, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தலைமை நிலைய செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி எஸ்.முருகன், அமைச்சர்கள் சி.வி.கணேசன், எஸ்.எஸ்.சிவசங்கர், தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பெருந்துறையில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க

# உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணி: கழக அரசு முன்னுரிமை அளிக்கும்!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு!

சென்னை, பிப்.15-

சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின்போது பதிலளித்த பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு, "பெருந்துறையில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்திட உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் திட்டத்துக்கு கழக அரசு முன்னுரிமை அளிக்கும்!" என்று குறிப்பிட்டார்.

**எஸ்.ஜெயக்குமார்:** கோயம்புத்தூர் - சென்னை தேசிய நெடுஞ்சாலை, பெருந்துறை புறவழிச் சாலையில் காஞ்சிகோயில் பிரிவு, துடுப்பதி பிரிவு, பெத்தாம்பாளையம் பிரிவு மற்றும் விஜயமங்கலம் பிரிவு ஆகிய இடங்களில் உயர்மட்டப் பாலம் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் எ.வ.வேலு:** கோவை-சென்னை தேசிய நெடுஞ்சாலை பெருந்துறை புறவழிச்சாலையில் காஞ்சிக் கோயில் பிரிவு, துடுப்பதி பிரிவு ஆகிய இரண்டு இடங்களில் நுழைவு பாலம் underpass அமைக்க, ஒப்பந்தங்கள் கோரப்பட்டு, பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது. அதேபோல, பெத்தாம்பாளையம் பிரிவு போதிய போக்குவரத்துச் செறிவு இல்லாத காரணத்தால், நுழைவு பாலம் அமைக்க தேவை ஏற்படாத காரணத்தினால், அதனருகிலே உள்ள காஞ்சிகோயில் பிரிவில் அமையவிருக்கும் பாலத்தினை இணைக்கும் வகையில் service road. அதாவது சேவை சாலை அமைப்பதற்கு பணிகள் இப்போது தொடங்கப்பட்டுள்ளது.

நான்காவதாக, விஜயமங்கலம் பிரிவு அருகில் ஏற்கெனவே பாலம் இருக்கிறது. அந்தப் பாலத்தை இணைக்கின்ற வகையில் புதிய சேவை சாலை ஒன்று அமைப்பதற்கு tender கோரப்பட்டிருக்கிறது. எனவே, அந்தப் பணிகளும் நடைபெறும். ஆகவே, நீங்கள் நான்கு பிரச்சினைகளை சொல்லியிருக்கிறீர்கள். அந்த 4 பிரச்சினைகளிலும் தேசிய நெடுஞ்சாலையாக இருந்தாலும், அதற்கு முன்னெடுப்பு எடுத்து, ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**எஸ்.ஜெயக்குமார்:** இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், தற்போது காஞ்சிகோயில் பிரிவு, துடுப்பதி பிரிவு ஆகிய இரண்டு இடங்களில் சுமார் ரூ.80 கோடி மதிப்பீட்டில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கும் பணிகளை அடுத்த மாதம் துவங்கவுள்ளதாக அறிந்தோம். எனவே, இத்திட்டத்தில் விடுபட்டுபோன பெத்தாம்பாளையம் பிரிவு, திருவாச்சி பிரிவு, விஜயமங்கலம் ஆர்.எஸ்.பிரிவு, மூங்கில்பாளையம் பிரிவு, கம்பளியம்பட்டி பிரிவு, பொன்மடி பிரிவு, சரளை பிரிவு ஆகிய நெடுஞ்சாலை சந்திப்புகளில் சர்வீஸ் சாலையுடன்கூடிய உயர்மட்ட மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் எ.வ.வேலு:** ஈரோடு இடைத்தேர்தலுக்குச் சென்றபோது, அந்தப் பகுதியிலிருப்பவர்கள் எல்லாம் என்னை நேரடியாகச் சந்தித்து, இந்தப் பகுதியில் அதிகமாக விபத்து ஏற்படுகிறது; ஆகையால் இங்கே underpass அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தியதன் அடிப்படையில், அதற்குப் பிறகு இரண்டு முறை நான் டெல்லிக்குச் சென்றபோது, நானும் எங்களுடைய துறையின் செயலாளர் அவர்களும் ஒன்றிய அரசினுடைய அமைச்சர் நிதின் கட்கரி அவர்களை நேரடியாக சந்தித்து, இதனை கட்டாயம் அமைக்க வேண்டுமென்று வலியுறுத்தியதன் அடிப்படையிலும், கடிதங்கள் அனுப்பியதன் அடிப்படையிலும்தான் தற்போது அந்த இரண்டு underpass அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். மற்ற இரண்டு பகுதிகளில் underpass அமைப்பதற்கு போதுமான இடங்கள் அங்கு இல்லை. ஆகையால், பக்கத்தில் 500 மீட்டர் நீளத்திற்கு service road அமைக்கப்பட்டால், அருகில் உள்ள பாலத்தில் செல்லலாம் என்ற அடிப்படையில்தான் இந்தத் திட்டங்கள் தொடங்கப்பட்டு, tender கோரியிருக்கிறார்கள்.

இந்த நான்கு பணிகளும் முடிந்துவிட்டதென்றால், விபத்துக்கள் அந்தப் பகுதியிலே ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை. அது முடிந்தவுடன் நீங்கள் நினைக்கிற கோரிக்கை நிறைவேற்றப்படும்.

**எஸ்.ஜெயக்குமார்:** கோவை சாலை வேட்டுவாளையம் பிரிவிலிருந்து பழைய பஸ் நிலையம், குன்னத்தூர் நான்கு ரோடு, அண்ணா சிலை roundtana, காவல் நிலைய roundtana ஆகிய இடங்களை இணைத்து உயர்மட்ட மேம்பாலம் அமைக்க வேண்டுமென பெருந்துறை சட்டமன்ற தொகுதி மக்களின் நீண்ட கால கோரிக்கையினை நிறைவேற்றித் தர வேண்டும்.

**அமைச்சர் எ.வ.வேலு:** அவர் சொல்கின்ற கோவை சாலை, சென்னிமலை சாலை, குன்னத்தூர் சாலை, ஈரோடு சாலை, பவானி சாலை இந்த சந்திப்புகள் தான் பெருந்துறையில் இருப்பது என்பது, கோயம்புத்தூருக்கு பழைய சாலை வழியாக போன எல்லோருக்கும் தெரியும். சமீபத்தில் இரண்டு மாதங்களுக்கு முன்னால், அந்தப் பக்கத்தில் பயணம் செய்தேன். நெரிசல் இருப்பது என்பது உங்கள் கண்ணோட்டத்திலே இருப்பது ஒன்று. அது தவறு இல்லை, இருக்கிறது. ஆனால், நெரிசல் இருக்கிற காரணத்தினால்தான் காவல் துறையின் சார்பாக அங்கெல்லாம் signal அமைக்கப்பட்டு முறையாக transport போய் கொண்டிருக்கிறது.

ஆனால், நீங்கள் ஏற்கெனவே சொல்கின்ற கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காக, எங்களுடைய துறையின் சார்பாக நாங்கள் ஆய்வு மேற்கொண்டோம். அதற்கு போதுமான அளவிற்கு போக்குவரத்துச் செறிவு, அதாவது போக்குவரத்துச் செறிவு என்றால், PCU என்று இருக்கிறது. Passenger Car Unit என்று அரசாங்கம் ஒரு இலக்கு வைத்துள்ளது. அதை தாண்டினால்தான் அந்த மேம்பாலமோ, மேல்மட்ட சாலையோ அமைக்க முடியும். அது இன்னும் அந்த அளவிற்கு வரவில்லை. ஆனால், தொடர்ந்து கண்காணித்துக் கொண்டு வருகிறோம். இந்த போக்குவரத்து கூடுதலாகின்றபோது, இந்த அரசாங்கம் அந்த மேல்மட்ட சாலை அமைப்பதற்கு வேண்டிய முயற்சி எடுத்து அதற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

திண்டிவனத்தில் கழக இளைஞர் அணி 2வது மாநில

# மாநாட்டுத் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் - கோவி.செழியன்-சூர்யா வெற்றி கொண்டான் சிறப்புரை!

திண்டிவனம், பிப்.15-

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திண்டிவனத்தில் கழக இளைஞரணி மாநாட்டின் தீர்மானம் விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் தலைமை அரசு கொறடா கோ.வி.செழியன், தலைமைக் கழக வழக்கறிஞர் செய்தி தொடர்பாளர் சூர்யா வெற்றி கொண்டான், அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவுக்கிணங்க விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் இளைஞர் அணி மாநாட்டின் தீர்மானம் விளக்க பொதுக்கூட்டம் திண்டிவனம் வ.உ.சி.திடல் வண்டிமேட்டில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நகர அவைத் தலைவர் ஆர். ஆர். எஸ் ரவிச்சந்திரன் தலைமை தாங்கினார். திண்டிவனம் நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன் அனைவரையும் வரவேற்றார். தலைமை செயற்குழு உறுப்பினர் சீனி சின்னசாமி, பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் டி. கே. பி. பெருமாள், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் அசோகன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், துணை அமைப்பாளர்கள் எம்.டி. பாபு, டி. கே .பி. ரமேஷ், மாணவரணி துணை அமைப்பாளர் சுபாஷ் சந்திரபோஸ், முன்னாள் நகர அவை தலைவர் பூதேரிசெல்வராஜ், நகரத் துணைச் செயலாளர்கள் ரேணுகா, தாஜ்தீன், நகர பொருளாளர் சின்ன ராஜேந்திரன், மாவட்டப் பிரதிநிதிகள் ராஜசக்தி,

வி.எஸ்.முருகன், சின்னதுரை, முன்னாள் துணைச் செயலாளர் அசோக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இளைஞர் அணி மாநாட்டின் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டத்தில் தலைமை அரசு கொறடா கோ.வி. செழியன், தலைமைக் கழக வழக்கறிஞரும் செய்தி தொடர்பாளர் சூர்யா வெற்றிக் கொண்டான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சரும் விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர் செஞ்சி மஸ்தான் ஆகியோர் கலந்துகொண்டு கழக இளைஞரணி மாநாட்டின் தீர்மானத்தை விளக்கி சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசியதாவது:

தமிழகத்தில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குவதற்காகதமிழ்நாடு முதலமைச்சர் வெளிநாடுகளுக்கு சென்று முதலீட்டாளர்களை சந்தித்து தமிழகத்திற்கு அழைத்து வருகிறார்.

ஆனால் பிரதமர் மோடி அவர்கள் ஆட்சி பொறுப்பேற்று 2022க்குள்பத்து கோடி பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கித் தரப்படும் எனத் தெரிவித்தார் ஆனால் கடந்த 2020ல் இருந்து 2022 காலகட்டத்தில் 1.40 கோடி பேர் வேலை இழந்துள்ளனர். இதில் 45 லட்சம் ஆண்கள், 95 லட்சம் பெண்கள் ஆவார்கள். வெளிநாட்டில் உள்ள இந்திய முதலீட்டாளர்களை இந்தியாவிற்கு வரவழைப்போம் என பெருமைப்பட பிரதமர் மோடி தெரிவித்தார். ஆனால் 2022-ல் மட்டும் சுமார் 2 லட்சம் முதலீட்டாளர்கள் மற்றும் வசதி படைத்தவர்கள் இந்திய குடிமையை துறந்து வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்ட நிலைமை தான் ஏற்பட்டுள்ளது.

கடந்த 2014 முதல் 2022 வரை அரசின் கடன் சுமை 56 லட்சம் கோடியில் இருந்து 139 லட்சம் கோடி ஆகவும் தனிமனித கடன் ரூபாய் 44 ஆயிரத்து 348 இல் இருந்து 1,01,048 ஆகவும், இந்தியாவில் வேலை இன்மை 4.7சதவிகிதத்தில் இருந்து 7.8 சரிவிகமாக உயர்ந்துள்ளதாகவும்.

கடந்த காங்கிரஸ் ஆட்சியின் போது 410 ரூபாய்க்கு விற்ற கேஸ் சிலிண்டர் இன்று 1053 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது,

மன்மோகன் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் வளர்ச்சி மூன்றாவது இடத்தில் இருந்தது தற்போது பிரதமர் மோடியின் ஆட்சியில் 164 வது இடத்தில் இந்தியாவின் வளர்ச்சி தள்ளப்பட்டு உள்ளது.

பொய்யான வாக்குறுதி கொடுத்து மக்களை நம்ப வைத்து ஆட்சிக்கு வந்த பிரதமர் மோடிக்கு எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் சரியான பாடம் புகட்டுவார்கள் என அமைச்சர் செஞ்சிமஸ்தான் தெரிவித்தார்.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ் செல்வன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன், துணைச் செயலாளர்கள் ரவிக்குமார், அருணகிரி, அமுதா ரவிக்குமார்,செஞ்சி ஒன்றியப் பெருந்தலைவரும் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், பொதுக்குழு உறுப்பினர்கள் வீடூர் ரவி, சாந்தி ஏழுமலை, பாலகிருஷ்ணன் செல்வராஜ் மணிவண்ணன், ஒலக்கூர் ஒன்றியப் பெருந்தலைவர் சொக்கலிங்கம், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஒலக்கூர் மேற்கு ராஜாராம், வல்லம் வடக்கு அண்ணாதுரை, மரக்காணம் ஒன்றியப் பெருந்தலைவர் தயாளன், வல்லம் தெற்கு ஒன்றியச் செயலாளர் துரை, மரக்காணம் மத்திய ஒன்றியச் செயலாளர் ரவிச்சந்திரன், மரக்காணம் மேற்கு ஒன்றியச் செயலாளர் பழனி, மயிலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் மணிமாறன், மத்திய ஒன்றியச் செயலாளர் செழியன், வல்லம் மத்திய ஒன்றியச் செயலாளர் இளம்வழுதி, செஞ்சி மத்திய ஒன்றியச் செயலாளர் விஜயராகவன், மேற்கு ஒன்றியச் செயலாளர் பச்சையப்பன், மேல்மலையனூர் மத்திய ஒன்றியச் செயலாளர் நாராயணமூர்த்தி, மேற்கு ஒன்றியச் செயலாளர் சாந்தி சுப்பிரமணியன், செஞ்சி நகரச் செயலாளர் கார்த்திக், அனந்தபுரம் நகரச் செயலாளர் சம்பத்,

மயிலம் ஒன்றியப் பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன், மேல்மலையனூர் ஒன்றியப் பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், செஞ்சிப் பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், அனந்தபுரம் பேரூராட்சி மன்றத் தலைவர் முருகன், மரக்காணம் பேரூராட்சி தலைவர் வேதநாயகி ஆள வந்தார், வல்லம் ஒன்றியத் துணைச் சேர்மன் மலர்விழி அண்ணாதுரை, மயிலம் ஒன்றியத் துணை சேர்மன் புனிதராமஜெயம், செஞ்சி ஒன்றியத் துணை சேர்மன் ஜெயபாலன், மேல்மலையனூர் ஒன்றியத் துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், செஞ்சி பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, அனந்தபுரம் பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் அமுதா கல்யாண் குமார், மரக்காணம் பேரூராட்சி மன்றத் துணை தலைவர்பலராமன், மாவட்டக் கவுன்சிலர்கள் ஒலக்கூர் கிழக்கு ஏழிலரசி ஏழுமலை, மேற்கு மனோசித்ரா ராஜேஸ்வரன், மயிலம் கிழக்கு மகேஸ்வரி குமரேசன், மயிலம் தெற்கு விஜயன், மரக்காணம் மேற்கு புஷ்பவல்லி குப்புராஜ், வல்லம் வடக்கு அன்புசெழியன், வல்லம் தெற்கு சசிகலா மோகனசுந்தரம், செஞ்சி மாவட்டக் கவுன்சிலர் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்திபன், மேல்மலையனூர் செல்வி ராமசரவணன்,

மாவட்ட அணி அமைப்பாளர்கள் வழக்கறிஞர் அணி எம்.எல்.பி.கோபிநாத், சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு அன்சாரி, மகளிர் தொண்டரணி சிவகாமி, விவசாய அணி ரகுபதி, மீனவர் அணி தங்கராஜ், ஆதிதிராவிடர் நல அணி திருமலை, நெசவாளர் அணி ரவிச்சந்திரன், விவசாய தொழிலாளர் அணி அண்ணாதுரை, விளையாட்டு மேம்பாட்டு அணி சந்திரன், பொறியாளர் அணி செந்தில் முருகன், அமைப்புசாராத் தொழிலாளர் அணி தமிழரசன், வர்த்தகரணி விஜயராகவன், தொழிலாளர் அணி செந்தில்குமார், சுற்றுச்சூழல் அணி எஸ். ராஜா, அயலக அனி காதர் நவாஸ், கலை பகுத்தறிவுப் பேரவை அணி செந்தில்குமார், இலக்கிய அணி புலவர் தமிழரசன், மகளிர் அணி திலகவதி, மருத்துவ அணி டாக்டர் சக்தி பிரியன், மாவட்ட மாணவரணி பிரசன்னா, தகவல் தொழில்நுட்ப அணி ரோமியன், இளைஞரணித் துணை அமைப்பாளர்கள் விஜயகுமார்,

எஸ். என்.ஆர். உதயகுமார், அண்ணாமலை மற்றும் திண்டிவனம் நகர மன்ற உறுப்பினர்கள், திண்டிவனம் நகர வார்டு செயலாளர், பல்வேறு அணிகளின் மாவட்டத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் துணை அமைப்பாளர்கள் திண்டிவனம் முன்னாள் நகர மன்ற உறுப்பினர்கள்,திண்டிவனம் நகர வார்டு பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். நகர துணைச் செயலாளர் கௌதமன் நன்றி கூறினார்.

# விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ.அறிக்கை!

விழுப்புரம், பிப்.15-

விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி கழக இளைஞரணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனைப் படி நாளை (16.2.2024-வெள்ளிக்கிழமை) மாலை 4 மணி அளவில் விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சி திடலில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க.பொன்முடி தலைமையிலும், விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும், சிறுபான்மையினர் மற்றும் வெளிநாட்டு வாழ் நலத்துறை அமைச்சருமான கே.எஸ்.மஸ்தான், விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட செயலாளர் தா.உயசூரியன் எம்.எல்.ஏ, கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி எம்.பி., உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜெ. மணிக்கண்ணன், கழக



மருத்துவ அணி இணைச் செயலாளர் டாக்டர் இரா. இலட்சுமணன் எம்.எல்.ஏ. ஆகியோர் முன்னிலையில் விழுப்புரம் ஒருங்கிணைந்த மாவட்டத்தில் ஒன்றிய பா.ஜ.க அரசைக் கண்டித்து "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" என்ற தலைப்பில் மாபெரும் பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி கலந்து கொண்டு சிறப்புரையாற்ற உள்ளார். அவ்வமயம் விழுப்புரம் தெற்கு, விழுப்புரம் வடக்கு மாவட்டம், உளுந்தூர் பேட்டை தொகுதிக்கு உட்பட்ட முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள், ஒன்றிய குழுத் தலைவர்கள், துணை தலைவர்கள், நகர மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், ஒன்றிய குழு உறுப்பினர்கள், நகர மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2), பாக முகவர்கள் (BLC), கழக செயல்வீரர்கள் மற்றும் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்

# நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன் கான் இல்ல மணவிழா!

## அமைச்சர் தங்கம் தென்னரசு - கனிமொழி கருணாநிதி வரவேற்புரை!

## அமைச்சர்கள் கே.என்.நேரு - ஐ.பெரியசாமி - எ.வ.வேலு-முன்னணியினர் வாழ்த்து!

நெல்லை, பிப்.15-

முதலமைச்சர் கழகத் தலைவர் நல்வாழ்த்துக்களுடன் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் இல்ல திருமண விழா கழக இளைஞர் அணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் (18.2.2024-ஞாயிற்றுக் கிழமை) ஹைகிரவுண்ட் எம்.ஓ.சி.வளாகம் காயிதே மில்லத் ஆடிட்டோரியத்தில் நடைபெறுகிறது.

நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் அவர்களின் பேத்தியும்,(மர்ஹூம்) எம்.காஜாபீர்முகமது கே.சைதாபானு ஆகியோரின் புதல்வி கே.அஃப்சான் நபோரா எம்.காம்.க்கும், பேட்டை எம். ஜவகர் அலி அவர்களின் பேரனும்,

பேட்டை (மர்ஹூம்) ஜெ.ஷேக் அப்துல்காதர் எஸ்.ஹசினா (ரோஜா)

ஆகியோரது புதல்வன் எஸ்.ஜவகர் அலி (அஸார்) பி.டெக்.சிவில் இன்ஜினியர்க்கும் இவர்களது திருமணம் வருகிற (18.2.2024 -ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணி அளவில் பாளையங்கோட்டை ஹைகிரவுண்ட் எம்.ஓ.சி வளாகத்தில் அமைந்துள்ள காயிதே மில்லத் ஆடிட்டோரியத்தில் நடைபெறுகிறது.

இந்த திருமண நிகழ்வு கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.கழக துணை பொதுச் செயலாளர் நாடாளுமன்ற தி.மு.க. குழு துணைத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள், நிதி மற்றும் மனித வள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன்,சா.ஞானதிரவியம் எம்.பி. ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

நிகழ்வில் சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு, கழக முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, கழக துணைப் பொது செயலாளர் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி,

பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் எ.வ.வேலு, கழக துணை பொதுச் செயலாளர்கள் கா. பொன்முடி,ஆ.ராசா எம்.பி.அந்தியூர் செல்வராஜ் எம்.பி. ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ எம்.பி. ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர் மற்றும் அமைச்சர் பெருமக்கள், தலைமைக் கழக நிர்வாகி கள், நாடாளுமன்ற, சட்டமன்ற,

உறுப்பினர்கள், மாநில அணி நிர்வாகி கள்,நெல்லை மாவட்ட கழக நிர்வாகிகள், கழக உடன் பிறப்புகள் மற்றும் உறவினர்கள், நண்பர்கள், பொதுமக்கள் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் என். மாலைராஜா,தலைமை செயற்குழு உறுப்பினர் ஏ.எல்.எஸ். லெட்சுமணன் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.